அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (13—5—2013) திங்கட்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5—21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

93. 2011—2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

94. 2008—2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் அவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

95. 2011—2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

96. 2011—2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

264. மானியக் கோரிக்கை எண் 43—பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013—2014. (தமிழ், ஆங்கிலம்)